# சுற்றறிக்கை

சுற்றறிக்கை எண்.1/2010/சி2/ நாள்4.1.2010

பதிவுத்துறைத் தலைவர் அலுவலகம்,
சென்னை-28

(பதிவுத்துறைத்தலைவர் கடித எண்.29867/சி2/2009)

பொருள் இந்திய முத்திரைச் சட்டம் 1899-பிரிவு 47A(4)-ன் கீழ் வட்டி வசூலித்தல் - தெளிவுரை தொடர்பாக.

பார்வை
1) பதிவுத்துறைத்தலைவர் கடிதம் எண்.41998/என்1/2001 நாள் 30.1.2002
2) அரசு கடிதம் எண்.19465/ஜே2/2008-2 நாள் 24.12.08

-------

இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47A(4)ன் கீழ் வசூலிக்க வேண்டிய அபராத வட்டி, மதிப்பு குறைவு தடுப்பு விதி 1968-ன் விதி 7(3) அமல்படுத்தப்பட்ட நாளான 9.3.01க்கு முன்னர் இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்ட ஆவணங்களுக்கு பொருந்தாது என பார்வை (1)ல் காணும் சுற்றறிக்கை மூலம் தெரிவிக்கப்பட்டது. மேலும் இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47A(4) அமலாக்கப்பட்ட நாளான 6.3.2000-க்கு முன் பதிவான ஆவணங்களுக்கு வட்டி வசூலிக்கும் நிலை எழாது என பார்வை (2)ல் காணும் அரசு கடிதத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47A(4) வட்டி வசூல் குறித்து சென்னை மற்றும் கோவை மாவட்ட வருவாய் அலுவலர்களால் சில ஐயப்பாடுகள் எழுப்பப்பட்டுள்ளன. அவை குறித்து பின்வருமாறு தெளிவுரை வழங்கப்படுகிறது.

| வ.எண் | ஐயப்பாடு | தெளிவுரை |
|---|---|---|
| 1. | 06.03.2000க்கு முன் பதிவான ஆவணங்களுக்கு 09.03.2001 அன்று அல்லது அதற்குபின் இறுதியாணை பிறப்பிக்கப்பட்டிருப்பின் அந்நிகழ்வுக்கு வட்டி வசூலிக்க வேண்டுமா? | வட்டி வசூலிக்க தேவையில்லை. |
| 2. | 06.03.2000 அன்று அல்லது அதற்கு பின் பதிவான ஆவணங்களுக்கு 09.03.2001-க்கு முன்னர் இறுதியாணை பிறப்பிக்கப்பட்டிருப்பின் அந்நிகழ்வுகளுக்கு வட்டி வசூலிக்க வேண்டுமா? | வட்டி வசூலிக்க வேண்டும். ஆனால் 09.03.2001-லிருந்து இரண்டு மாதங்கள் சலுகை காலம் (grace period) கழித்து வசூலிக்க வேண்டும். |
| 3. | 06.03.2000 அன்று அல்லது அதற்குப் பின் பதிவான ஆவணங்களுக்கு 09.03.2001 அன்று அல்லது அதற்குபின் இறுதியாணை பிறப்பிக்கப்பட்டிருப்பின் வட்டி வசூலிக்க வேண்டுமா? | வட்டி வசூலிக்க வேண்டும். |

ஒம்/-இரா.சிவகுமார்.இ.ஆ.ப.,/4.01.2010

பதிவுத்துறைத்தலைவர்